**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 42 /2023**

**Deposition of P.W.** 1

Name : திரு. அருளப்பன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:13.08.2025**

**All Accused Present.**

முதல் விசாரணை–

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் தாழமுத்துநகர் காவல்நிலையத்தில் காவல்ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இத்நுகு முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 26.03.2021ம் தேதியன்று இரவுரோந்து அலுவலாக நானும், தலைமைக்காவலர் 1028 திரு. ராபர்ட், தலைமைக்காவலர் திரு. செல்வின் மற்றும் தலைமைக்காவலர் திரு. செல்வின் ஜோசப் ஆகியவர்களுடன் ரோந்து செய்து 27.03.2021ம் தேதியன்று அதிகாலை 03.00 மணிக்கு மணலி பெட்ரோல் பல்க் பக்கம் வரும் போது தென்னந்தோப்பில் 3 கார்கள் சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்ததை விசாரிக்க சென்ற போது காருக்கு பின்னால் தென்னந்தோப்பில் கூடி நின்ற நபர்கள் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் கலைந்து ஓடியவர்களை மடக்கி

பிடிக்க அதில் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த லீப்புரம் தெற்கு தெரு, ஆமணக்காவிளை சூடாமணி மகன் சுரேஷ், தாசிம், முகமது மைதீன், நாசர் மற்றும் ரெனு ஆன்டனி ஆகியவர்கள் என்பது தெரிய வந்தது. மேற்படி நபர்களை விசாரித்து காரகளை சோதனையிட்ட போது மாருதி சென் எஸ்டிலோ காரில் இரண்டு அருவாள்களும், டாடா இன்வோ காரில் இரண்டு அருவாள்களும், மாருதி சிப்ட் காரில் நம்பர் பிளேட் இல்லாமல் இருந்தது. அதில் அருவாள் ஒன்றும், இரும்பு கம்பி ஒன்றும், இரண்டு நம்பர் பிளேட்டுகளும் இருந்தது. காரின் அருகில் யமஹா என்ற இருசக்கர வாகனம் இருந்தது. அதன் பெட்ரோல் டேங்க் கவரில் இரும்பு சுத்தியல் காணப்பட்டது. மேலும் தப்பி ஓடிய நபர்களை பற்றி விசாரிக்க அவர்கள் வில்லுக்குறியை சேர்ந்த தினேஷ், திட்டுமேல்கோணத்தை சேர்ந்த எட்வின் ராபர்ட், கண்ணன் மற்றும் சச்சின் என தெரிய வந்தது. மேற்படி நபர்களை விசாரிக்க நாங்கள் ஒன்று சேர்ந்து கொள்ளையடிக்க வேண்டி திட்டம் தீட்டி அந்த பகுதியில் இருந்ததாக கூறியவர்களை கைது செய்து அத்தாட்சியில் மேற்படி சொத்துக்களை கைப்பற்றியும், சொத்துக்கள் மற்றும் எதிரிகள் சகிதம் நிலையம் வந்து சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1. புகார் மனு அ.சா.ஆ.2. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>1 மற்றும் 3வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

2வது எதிரிதரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

2வது எதிரி மூன்று கார்கள் மற்றும் இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் இல்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனது

புகாரில் வாகன உரிமையாளர்கள் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆயுதங்களை வாகனங்களிலிருந்து தான் கைப்பற்றினோம். 2வது எதிரியை காவல்நிலையத்தில் ஒப்படைத்த பிறகு தான் புகார் கொடுத்தேன். சந்தேகத்தின் பேரில் தான் விசாரிக்க சென்றோம். குறிப்பிட்டு எதிரிகள் இருப்பதாக அங்கு செல்லவில்லை. புகாரில் எதிரிகளின் பெயரை யார் சொன்னார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை. எதிரிகளை விசாரித்து பெயர், முகவரியை தெரிந்து கொண்டோம். எதிரிகளை விசாரித்து தெரிந்து கொண்டதாக புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் என்று சொல்லப்படும் இடம் காவல்நிலையத்திலிருந்து 2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். அந்த இடத்தில் விஜயா மருத்துவமனை, H.P. பெட்ரோல் பல்க் ஆகியவை உள்ளது என்றால் சரிதான். பெட்ரோல் பல்க்கும், மருத்துவமனையும் 24 மணி நேரமும் செயல்படும் என்றால் சரிதான். எந்த வாகனத்தில் இரவு நேர ரோந்து போனோம் என்று புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை. இரவு நேர ரோந்து செல்லக்கூடிய அலுவலர்கள் பற்றிய குறிப்பு பராமரிக்கப்படும் என்றால் சரிதான். 26.03.2021ம் தேதி பொதுநாட் குறிப்பை சோதனை செய்தால் இரவு ரோந்து சென்ற நபர்கள் விபரம் தெரியும் என்றால் சரிதான். நாங்கள் எந்த திசையிலிருந்து போனோம் என்று புகாரில் குறிப்பிடவில்லை. என்னுடன் ரோந்துக்கு வந்த நபர்கள் புகாரில் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை. என்ன நிறத்திலான கார்கள் என்று புகாரில் குறிப்பிடவில்லை. வாகன உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் மனு செய்து வாகனங்களை திரும்ப பெற்றார்களா என்று எனக்குத் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு மேற்கு

.4.

பக்கம் வடக்கு – தெற்காக அறம்புறவிளை என்ற ரோடு செல்கிறது என்றால் சரிதான். அந்தரோட்டிற்கு மேற்கு பக்கம் மேசியா கார் ஒர்க்ஸ் கடை உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. தெற்கு பக்கமுள்ள தேசீய நெடுஞ்சாலையில் 24 மணி நேரமும் வாகனங்கள் செல்லும் என்றால் சரிதான். தேர்தல் நேரங்களில் குற்ற பின்னணி கொண்டவர்களை கண்காணிக்கும் வழக்கம் உண்டு என்றால் சரிதான். 06.04.2021ம் தேதி தமிழக சட்ட சபைக்கான தேர்தல் நடந்தது என்றால் சரிதான். 2வது எதிரிக்கும், வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றும், தேர்தலுக்காக 2வது எதிரியை பொய்யாக கைது செய்தோம் என்றால் சரியல்ல.

**<u>4வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகாரில் ரோந்து சென்ற வாகன எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் கார்கள் தென்னந்தோப்பின் பக்கம் நின்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தென்னந்தோப்பில் நின்றதாக குறிப்பிடவில்லை. எதிரிகள் தென்னந்தோப்பிற்குள் நின்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் வாகனத்திற்குள் இருந்ததாகவோ, வாகனத்தை பயன்படுத்தியதாகவோ துலங்காது என்றால் சரிதான். ஆயுதங்களை எதிரிகள் கைகளில் வைத்திருந்ததாக துலங்காது என்றால் சரிதான் நான் சொன்னது போல் சம்பவ இடத்தில் எதிரிகள் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து சான்று பொருட்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.



**<u>5வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

6வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்

**<u>6வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எந்தெந்த காவலர்களுக்கு என்னென்ன பணி ஒதுக்கப்பட்டுள்ளது என்பது காவல்நிலைய பதிவேட்டில் இருக்கும் என்றால் சரிதான். 26.03.2021 மற்றும் 27.03.2021 தேதி என்னுடன் எத்தனை காவலர்கள் ரோந்திற்கு வந்தார்கள் என்று குறிப்பிட்டிருக்கும் என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் பதிவேடு குறித்து நான் கூறவில்லை என்றால் சரிதான். 1 மற்றும் 6வது எதிரிகள் மீது தக்கலை காவல்நிலையத்தில் ஏற்கனவே குற்ற வழக்குகள் உள்ளதால் அவர்களை எனக்கு முன்னரே தெரியும் என்றால் சரிதான். புகாரிலும், ஆய்வாளர் விசாரணையிலும் 1 மற்றும் 6வது எதிரிகள் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்ததை பார்த்ததாகவோ, அவர்கள் தப்பி ஓடியதை பார்த்ததாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை கைது செய்யும் போது கைது செய்யும் இடத்தில் வைத்து கைதிற்கான காரணம் குறிப்பிட்டு கைது நமூனா கொடுப்போம் என்றால் சரிதான். எதிரிகளை நான் தான் கைது செய்ததாக கூறியுள்ளேன். கைது நமூனா கொடுத்ததாகவோ, கைதிற்கான காரணம் தெரிவித்ததாகவோ குறிப்பிடவில்லை என்றால் நான் குறிப்பிடவில்லை, காவல் ஆய்வாளர் நிலையத்தில் வைத்து கைது செய்தார். புகாரில் எதிரிகளை கைது செய்து நிலையம் கொண்டு வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அத்தாட்சியில் உள்ள விபரங்கள் சம்பவ இடத்தில் வைத்து எழுதப்பட்டது



என்றால் சரிதான். 04.30 மணிக்கு புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு தான் இவ்வழக்கின் குற்ற எண் தெரிவிக்கப்பட்டது. எதிரிகளை நிலையத்தில் ஒப்படைக்கும் போது

ஆய்வாளர் இல்லை. ஆய்வாளருக்கு எதிரிகள் கைது குறித்து தகவல் கொடுக்கவில்லை என்றால் வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளர் தகவல் கொடுத்திருப்பார். அத்தாட்சியில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் 5 முதல் 9 வரையிலான சொத்துக்களை அடிபகுதியில் கொக்கியுடன் கூடியது என்று இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது. இடைச்செருகலில் உள்ள சுருக்கொப்பம் என்னுடையது இல்லை. இவ்வழக்கில் உள்ள ஆவணங்கள் ஆவணத்திற்கு ஏற்ப பின்னர் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. மாருதி கார் நம்பர் இல்லாமல் இருந்ததாக புகாரிலும், காவல் ஆய்வாளரிடமும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அத்தாட்சியில் மாருதி காரின் எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாகனத்திற்குள் அதன் எண் இருந்தது. அத்தாட்சியில் வாகனத்திற்குள் நம்பர் பிளேட் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சான்று பொருட்கள் எதிரிகளிடமிருந்து நேரடியாக கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடவில்லை. எதிரிகள் அடையாளம் காட்டி சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை. புகாரில் எதிரிகள் ரேனு ஆன்டனி, கண்ணன் சச்சின் ஆகியவர்களை தென்னந்தோப்பில் வைத்து கைது செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ரேனு ஆன்டனியை பிடித்ததாக புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் ரேனு ஆன்டனியை விஜயா மருத்துவமனையில் அருகில் வைத்து பிடித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். சொன்ன தேதியில்,



சொன்ன இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் புகாருக்கு முன்னர் தயார் செய்த அத்தாட்சியில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை

என்றால் சரியல்ல. 5வது எதிரிக்கு இவ்வழக்கிற்கு முன்னர் வேறு வழக்குகள் இல்லை என்றால்அது பற்றி எனக்குத் தெரியாது.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 42/2023**

**Deposition of P.W.**2

Name : திரு. ராபர்ட் ராஜ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
Dated:13**.08.2025**

**Accused Present**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது ஆறுகாணி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றிய போது நானும், சார்பு ஆய்வாளர் திரு. அருளப்பன். தலைமைக்காவலர் திரு. செல்வின் தலைமைக்காவலர் திரு. செல்வின் ஜோசப், ஆகியவர்கள் 27.03.2021ம் தேதி காலை 03.00 மணிக்கு ரோந்து சென்ற போது அழகியமண்டபத்திலிருந்து – தக்கலை நோக்கி வரும் போது மணலி பெட்ரோல் பல்க் அருகில் உள்ள தென்னந்தோப்பின் பக்கம் 3 கார்கள் நின்றன. சந்தேகப்படும்படியாக நின்றதால் அந்த வாகனத்தை சோதனை செய்தோம். எதிரிகள் வாகனத்தின் பின்பக்கம் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். போலீசாரை பார்த்ததும் எதிரிகள் பயந்து ஓடினார்கள். எதிரிகளை மடக்கி பிடித்து விசாரித்த போது சுரேஷ், ரெனு ஆன்டனி, நாசர், தாசிம் ஆகியவர்களை பிடித்தோம். அவர்களை விசாரித்த போது தினேஷ், எட்வின் ராபர்ட், கண்ணன், சச்சின் ஆகியவர்கள் ஓடிவிட்டதாக கூறினார்கள். கூட்டுறவு வங்கி, பெட்ரோல் பல்க் ஆகிய இடங்களில் கொள்ளையடிக்க நின்றதாக கூறினார்கள். கார்களில் 5 அருவாள்கள், ஒரு இரும்பு கம்பி, யமஹா இருசக்கர வாகனம், மற்றும் அதில் ஒரு இரும்பு சுத்தியல் இருந்தது. அவைகளை சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில்

கைப்பற்றி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்

**<u>1 மற்றும் 3வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

**<u>2வது எதிரிதரப்பு குறுக்கு விசாரணை</u>**

அழகியமண்டபத்திலிருந்து – தக்கலை வரும் போது எதிரிகளை பார்த்ததாக ஆய்வாளரிடம் சொன்னேன். சம்பவம் நடந்ததாக கூறும் இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு 10 நிமிடங்களில் வந்து விடலாம். கைப்பற்றப்பட்ட கார்களை யார் காவல்நிலையத்திற்கு கொண்டு வந்தார்கள் என்று நான் கூறவில்லை. சம்பவம் நடந்ததாக கூறும் இடத்திற்கு மேற்கு பக்கம் அறம்புறவிளை ரோடு உள்ளது. அதற்கு மேற்கு பக்கம் மேசியா கார் ஒர்க்ஸ் உள்ளது. தேசீய நெடுஞ்சாலையில் தெற்கு பக்கம் விஜயா மருத்துவமனை மற்றும் முருகன் இளநீர் கடை உள்ளது. மருத்துவமனையில் உள்ள நபர்கள் தகவல் சொல்லி நாங்கள் வரவில்லை. மருத்துவமனை மற்றும் பெட்ரோல் பல்க் ஆகியவை 24 மணிநேரமும் செயல்படகூடியது என்றால் சரிதான். மேற்படி இடங்களில் காவலாளி



மற்றும் பணியாளர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். இரவு ரோந்து செல்லும் போது பொதுநாட் குறிப்பில் பதிவு செய்து விட்டு தான் போனோம். முதல் விசாரணையில் சொன்ன தேதியிலும், பதிவு செய்துவிட்டு தான் ரோந்து போனோம். வழக்கில் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் விஜயா மருத்துவமனையின் முன்பு ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் விசாரணையில் என்ன நிற கார்கள் என்று கூறவில்லை. கார்கள் மற்றும் அரிவாள்களை காவல்நிலையத்தில் வைத்தும் பார்வையிட்டேன். வழக்கிற்கும் 1 முதல் 3 வரையிலான

எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. தேர்தல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எதிரிகள் மீது பொய் வழக்கு போட்டோம் என்றால் சரியல்ல. போலீசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>4வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எங்கு எல்லாம் ரோந்து போனோம் என்று தற்போது ஞாபகமில்லை. எந்த எண் கொண்ட வாகனத்தில் ரோந்து போனோம் என்று குறிப்பிடவில்லை. வாகனங்களை எந்தெந்த எதிரிகள் பயன்படுத்தினார்கள் என்று நாங்கள் பார்க்கவில்லை. ஆயுதங்கள் எதிரிகளின் கைகளில் இல்லை. சம்பவ நாளில் ரோந்து செல்லவில்லை என்றும், பொய்யக வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

<u>**5 மற்றும் 6வது** எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

ஆய்வாளர் விசாரணையின் போது அழகியமண்டபத்திலிருந்து வந்ததாக கூறவில்லை. தற்போது மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 5, 6 எதிரிகள் சம்பவ இடத்தில்இருந்ததாகவோ



போலீசாரை பார்த்ததும் தப்பித்து ஓடியதாகவோ அதனை நேரில் பார்த்ததாக ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. தென்னந்தோப்பில் வைத்து சார்பு ஆய்வாளர் ரேனு ஆன்டனி என்பவரை கைது செய்தார் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளரிடம் பணிகள் ஒதுக்கீடு பதிவேடு நகலை கொடுக்கவில்லை. ரோந்து பதிவேட்டை பார்வையிட்டால் வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் அதனை தாக்கல் செய்யவில்லை

என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.